1972 மார்ச் 28]

திரு. கா. காளிமுத்து : தற்பொழுது ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் பணியாற்றிவருகின்ற இளைஞர் அணியும் அந்த மக்கள் தொடர்பு அதிகாரிகளின் கீழ் கொண்டுவரப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தனித்தனியாகத்தான் இயங்கிக்கொண்டிருக்கிறார்கள். இரண்டையும் இணைப்பதோ அல்லது அவர்களை மேற்பார்வைசெய்வதை மேற்கொள்ளச் செய்வதோ இப்பொழுது ஆராயப்படவில்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : அரசுக்கும் மக்களுக்கும் பாலமாக அமைந்திருக்கிற மக்கள் தொடர்பு அதிகாரிகள் எத்தனை பேர்கள் தற்பொழுது அமர்த்தப்பட்டு இருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : எட்டு அதிகாரிகள் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள்.

Tamil Nadu Raffles

* 743 Q.—THIRUMATHI T. N. ANANDANAYAKI : Will the Hon. the Chief Minister be pleased to state the number of Raffle tickets sold so far since its inception and the total amount thus collected?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : 1968-ஆம் ஆண்டு அக்டோபர் திங்களிலிருந்து 1972-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் வரையில் (முதல் குலுக்கலிலிருந்து 25-2-1972-ஆம் நாள் நடைபெற்ற 41-வது குலுக்கல் வரையில்) விற்கப்பட்ட பரிசுச் சீட்டுகளின் மொத்த எண்ணிக்கை 25,55,35,773 -ஆகும். அதன் மூலம் கிடைக்கப்பெற்ற மொத்தத் தொகை (பெரு மொத்தத் தொகை) ரூ. 27,61,85,673 ஆகும்.

திரு. கே. எ. வகாப் : தலைவர் அவர்களே, இப்படிக் கிடைக்கிற தொகைகள் எந்த எந்தத் துறைகளுக்குச் செலவழிக்கப்படுகின்றன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : கல்வி, மருத்துவம் போன்ற பல்வேறு துறைகளுக்குச் செலவழிக்கப்பட்டிருக்கிறது.

[1972 மார்ச் 28

திரு. அ. ஆறுமுகம் : தலைவரவர்களே, இந்தப் பரிசுச் சீட்டுகள் எந்த மாவட்டத்தில் அதிகமாக விற்றிருக்கிறது? அதிகமாக விற்ற மாவட்டத்திற்கு சிறப்புப் பரிசு ஏதாவது வழங்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு உறுப்பினரவர்களுடைய அக்கறையின் அடிப்படையில் இதை ஆராய்ந்து ஆவன செய்யலாம்.

விக்கிரமசிங்கபுரம் ஊராட்சியிலுள்ள கோழிப்பண்ணை

* 744 வினா—திரு. ச. சங்குமுத்து தேவர் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அம்பாசமுத்திரம் தொகுதி, விக்கிரமசிங்கபுரம் பஞ்சாயத்தில் 1962–63-ல் துவக்கப்பட்ட கோழிப்பண்ணை தற்போது என்ன நிலையில் உள்ளது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : வட்டார கோழி அமைப்பு ஒன்று 18-6-1963-ல் விக்கிரமசிங்கபுர ஊராட்சியில் ஆரம்பிக்கப்பட்டது. மேற்கண்ட கோழி அமைப்பு 30-11-64-ல் ஊராட்சியால் இயற்றப்பட்ட தீர்மானம் எண் 141-ன்படி 31-12-64 உடன் மூடப்பட்டது. மூடப்பட்ட சமயம் கோழி மற்றும் ஏனைய உபகரணங்கள் ஏலத்தின் மூலம் விற்கப்பட்டன.

திரு. ச. சங்குமுத்து தேவர் : தலைவரவர்களே, இந்தப் பண்ணை பஞ்சாயத்தோ அல்லது பஞ்சாயத்து யூனியன் அனுமதியில்லாமல் ஆரம்பிக்கப்பட்டதா ? அதில் ஏற்பட்ட நஷ்டத்தை சம்பந்தப் பட்டவர்களிடமிருந்து வசூல் செய்ய வேண்டுமென்று தணிக்கை செய்யப்பட்டதா ? அந்த நஷ்டத்தை மீண்டும் தள்ளுபடி செய்ய அரசினரிடம் கேட்கப்பட்டதாக ஏதாவது குறிப்பு வந்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, 18-6-1963-இல் இந்தக் கோழிப்பண்ணை அங்கே வைக்கப்பட்டது. இது ஊராட்சி மன்றத்தின் சார்பாக வைக்கப்பட்டது. அரசு மானியம் கொடுக்கவில்லை. அப்படி வைக்கப்பட்டு 15 பெட்டைகளும், 1 சேவலும் ஆக 16 கோழிகள் முதலிலே சேர்க்கப்பட்டன. பிறகு 2 பெட்டைகள், 1 சேவல் ஆக 3 கோழிகள் சேர்க்கப்பட்டன.

1972 மார்ச் 28]

ஏற்பட்ட செலவினால் நஷ்டம் அதிகமாகியது. முதலாண்டில் 1,387 ரூபாய் 52 காசு, இரண்டாவது ஆண்டில் 923 ரூபாய் 24 காசு. இலாபம் எதுவும் வரவில்லை, நஷ்டம்தான் ஏற்பட்டது. ஆகவே, 64-வது ஆண்டு ஏலத்தில் விடுவது என்று அதே ஊராட்சி மன்றமே முடிவெடுத்து ஏலம் விடப்பட்டது.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், இந்தக் கோழிப்பண்ணைகளை புதிதாக அமைத்து நல்லமுறையிலே சில பண்ணைகள் நடக்கின்றன என்று ஏற்கனவே இரண்டு நாட்களுக்கு முன்பு சொன்னார்கள். எனவே ஆரம்பித்த கோழிப்பண்ணைகளை மீண்டும் நல்ல முறையில் நடத்துவதற்கு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, கோழிப்பண்ணை ஆரம்பிக்கும் முறை வளர்ச்சி அடைவதற்காகப் புதிய திட்டங்களை அந்தத் துறையினர் இப்பொழுது மேற்கொண்டு வருகிறார்கள். இது ஊராட்சி மன்றத்தின் சார்பாக, நஷ்டம் ஏற்பட்டதன் காரணமாக அப்பொழுது மூடிவிட்டார்கள். இலாபம் வரும் முறையில் இப்பொழுது புதிய முறைகள் கண்டு பிடிக்கப் படுகின்றன. அந்த முறைகளில் ஊராட்சி மன்றங்கள் வந்தால் அதற்குத் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளலாம்.

புதுப்பாலப்பட்டிக்கு ஊராட்சி

*745 வினா—திரு. ந. நாச்சியப்பன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குரும்பக்கவுண்டன் சாகிர் பகுதியைச் சேர்ந்த புதுப்பாலப்பட்டில் ஊராட்சி மன்றம் ஏற்படுத்தக் கோரி அக்கிராம மக்கள் 1965-லிருந்து 1967-68 வரை அரசாங்கத்தை கோரினார்களா ?

(இ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

[1972 மார்ச் 28

Residence for Chairmen of local bodies

* 746 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether there are proposals under the local bodies to have official residence for their Chairmen; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) நிலையான மேயர் இல்லம் கட்டுவது பற்றிய கருத்துருவில் ஒரு முடிவு காணும்வரை, சென்னை நகர மேயர் வாடகைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட அதிகாரபூர்வமான தனியார் மாளிகையில் வசிக்கிறார்கள். வேறு உள்ளாட்சி மன்றங்களின் தலைவர் இல்லம் கட்டுவதற்குரிய செயற்குறிப்பு யாதொன்றும் அரசிடம் இல்லை.

THIRU N. DENNIS : For the effective transaction of work such housing scheme would be helpful. So, may I know from the Hon. Minister whether Government will take steps to implement such housing schemes to the Chairmen of Municipal Councils and Panchayat Union Councils?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, பல இடங்களிலே நிதிப்பற்றாக்குறை இருக்கிறது. ஆகவே, நிதி வசதி அதிகமாக இருந்து, இதற்கு வழிவகை செய்ய முடியுமென்ற செயற்குறிப்பு அந்தந்த நகராட்சிமன்றத்தின் மூலம் வந்தால் அரசாங்கம் பரிசீலிக்கலாம். சென்னை மாநகராட்சியைப் பொறுத்த வரையில் மேயருக்கு என்று தனி இல்லம் அவசியம் என்று கருதி இந்த ஆண்டு வாடகைக்கு எடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, மாநகராட்சி மன்றமே நிலையான ஒரு கட்டிடம் வேண்டுமென்ற செயற்குறிப்பைப் பரிசீலனை செய்து கொண்டு இருக்கிறார்கள்.

திரு. ஏ. சி. நரசிம்மன் : தலைவரவர்களே, முன்பு நகர்மன்றத் தலைவர்களாக பெரிய பணக்காரர்கள் வந்துகொண்டிருந்தார்கள். இப்பொழுது மிகவும் சாமான்யமானவர்கள், ஏழைகள் வருகிறார்கள். இவர்கள் இருக்கும் வீடுகள் மிகச்சிறிய வீடுகள், பார்க்க வருபவர்களை இவர்கள் பார்ப்பதற்கே கூச்சப்படும் நிலையில் இருக்கிறது ஆகவே நகர்மன்றத் தலைவர்கள் வீட்டுக்குச் சென்றால் அலுவலகத்தில் பார்க்கும்படி கூறிவிடுகிறார்கள். ஆகவே, இந்த ஏழைகள் நகர்மன்றத் தலைவர்களாக வந்துவிட்ட காரணத்தால்